வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

**அரசு தரப்பு சாட்சி 20**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : புஷ்பராணி | தாலுக்கா | : |
| கணவர் பெயர் | : பாலமுருகன் | தொழில் | : உதவி இயக்குநர், தடய அறிவியல் துறை |
| ஊர் | : சென்னை | வயது | : 56 /2024 |

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்)**

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1973ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231ன்கீழ், சாட்சியம் காணொலி மூலம் பதிவு செய்யப்பட்டது.

நாள் 22.11.2024.

**அரசு தரப்பில் 20 ம் சாட்சியின் முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை தடய அறிவியல் துறையில் மானுடவியல் பிரிவின் உதவி இயக்குநராக பணியாற்றி வருகிறேன். எனக்கு இத்துறையில் 26 வருட அனுபவங்கள் உள்ளது. நான் மனித முகங்கள் மற்றும் மண்டை ஓடுகளை அடையாளம் காண்பதில் முனைவர் பட்டம் பெற்றுள்ளேன். கடந்த 22.02.2021 அன்று ஜெயமங்கலம் காவல் நிலைய குற்ற எண் 10/2021 சம்மந்தப்பட்ட வழக்கின் பொருட்களை நீதித்துறை நடுவர், பெரியகுளம் அவர்களின் அறிவுறுத்தலின்படி தலைமைக் காவலர் எண் 1469, திரு.ஐயப்பன் என்பவர் மூலம் எனது ஆய்வகத்தில் பெற்றேன். அவற்றில் முத்திரையிடப்பட்ட காகித உறையினுள் வைக்கப்பட்டிருந்த ஆண் நபர் ஒருவரின் புகைப்படத்தை பொருள் எண் 1 என்று எண்ணிட்டு முத்திரையிடப்பட்ட பிளாஸ்டிக் வாளி ஒன்றினுள் வைக்கப்பட்டிருந்த துண்டிக்கப்பட்ட தலை மேற்கூரை (Skull) திறந்த நிலையில் இருந்ததை பொருள் எண் 2 என்று எண்ணிட்டேன். பின்பு மண்டை ஓடு சுத்தம் செய்யப்பட்டு ஆய்விற்கு உகந்தவாறு சீரமைக்கப்பட்டது. பின்பு மண்டை ஓட்டையும், புகைப்படத்தையும்

புஷ்பராணி 22/11/24

கணினியின் உதவியுடன் கூடிய Super Imposition முறையில் பிம்பக்கலவை ஆய்வு செய்தேன். அந்த ஆய்வில் மண்டை ஓடானது புகைப்படத்தில் காணப்பட்ட ஆண் நபரின் முகத்தினுள் சதை கனத்திற்கு உட்பட்டும், மானுடவியல் ரீதியான அமைப்புகளுக்கு உட்பட்டும் வெகுவாக பொருந்தி இருந்தது. எனது ஆய்வின் முடிவில் 09.08.2021 நாளிடப்பட்ட மானுடவியல் ஆய்வு அறிக்கை எண் 41 மற்றும் 42/2021 ல் பொருள் எண் 2 மண்டை ஓடானது பொருள் எண் 1 ல் காணப்பட்ட ஆண் நபரின் மண்டை ஓடாக இருப்பதற்கு சாத்தியம் உள்ளது என்ற எனது கருத்தினை உள்ளடக்கி அத்துடன் எனது ஆய்வின் போது எடுக்கப்பட்ட கணினி லேசர் பிரதிகள் நான்கினை இணைத்து நான் ஆய்வு செய்த பொருட்களையும் ஆய்வு அறிக்கையையும் 27.08.2021 அன்று முதல் நிலை பெண் காவலர் எண் 750 திருமதி.ஜரின் ஸ்டெல்லா விமலா என்பவர் மூலம் மாண்புமிகு நடுவர் நீதிமன்றம் பெரியகுளத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் வழங்கிய மானுடவியல் ஆய்வறிக்கை அ.சா.ஆ.15 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

(எதிரிகளின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

22/11/24

காணொலி மூலம் சாட்சியம் பதியப்பட்டு, சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

22/11/24

Identified the witness by
me at the Remote Point

GOVERNMENT OF TAMILNADU

FORENSIC SCIENCES DEPARTMENT

No.30A, Kamarajar Salai, Mylapore, Chennai-600 004



முனைவர் .செ.புஷ் பரா ணி

உதவி இயக்குநர்

**Dr. C. PUSHPARANI**

**ASSISTANT DIRECTOR**

ID NO. 1915771 | DOB 08/08/1967

B.G. B+ve | VALIDITY 31/08/2025

Sig. of the Holder — Authorised Signatory

22/11/24

Card Issue Date : 27/09/2019
G.P.F. NO. :191577/POLICE

## INSTRUCTIONS

1. The Vard is to be produced on demand.
2. The responsibility of preservation of Identity Card is on the card Holder.
3. The Holder must report immediately to the issung authority, if the card is lost/ damaged.
4. The cost of replacement will have to be paid by the staff.
5. The card is to be returned by the Holder to the issuing authority on resignation/ retirement.

Residental Address:
63A15, 3rd Street,
Indira Nagar, Ashok Nagar,
Chennai - 600083

Phone No: 9444056803, 9444056802

If found, please send it to the office address specified or inform us at 04428447773